உ

# வடந்தை

துகளில்லாத புது உலகம் தோன்றல் வேண்டும் என்போம்

காலம் – 05 | வைகாசி – ஆவணி | காற்று – 13



**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
**வடமாகாணம்**



**வெளியீடு:**
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.
தொலைபேசி இல. 021 320 2990

**ஆலோசகர்:**
திரு.சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி அமைச்சு,
வடமாகாணம்.

**முகவரி:**
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குழு:**
திருமதி என்.ஸ்ரீதேவி
திரு. வி.குணபாலா



# நுழைவாயில்...

எங்கும் வசந்த கால நிகழ்வுகள் – ஊர்
கூடி தேர் இழுக்கும் திருவிழாக்கள்
பக்தியுடன் சக்தி வேண்டிய பக்தர்களின்
வானை முட்டும் பிரார்த்தனைகள்.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து
படைக்கும் பாரம்பரிய, கிராமிய கலை ஆற்றுகைகள்.
பிரதேச பண்பாட்டைப் பேணும் காத்திர செயற்பாடுகள்.
வடமாகாணம் எங்கனும்...

ஆண்டு இரண்டாயிரத்துப் பன்னிரண்டின்
வைகாசி – தொடக்கம் ஆவணி வரையான
மாதங்கள் நான்கில் திணைக்களம் – ஆற்றிய பணிகள்
ஆவணமாய் உங்கள் முன்... விமர்சனங்கள் வருக. வருக.

– ஆசிரியர்கள்

# "பேசும் கண்ணீர்"

## குறும்பட வெளியீடு



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் காலத்திற்குக் காலம் பல்வேறு வகையான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே. அந்தவகையில் இன்றைய சமூக சூழலில் எல்லோராலும் பேசப்பட்டு வருகின்றதும், பாதிப்பு மிகுந்ததுமான, கலாசாரச் சீரின்மை அல்லது கலாசாரப் பிறழ்வு தொடர்பான கதை அமைப்பை மையமாகக்கொண்டு இக்குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்குறும்படம் தொடர்பான முன்னோட்டம் (Trailer) 2012.06.01ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டுப் பாராட்டுக்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.என்.ஸ்ரீதேவி ஆகியோர் கலந்துகொண்டனர்.



2012.06.08ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் தலைமையில் இதன் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் இக்குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டதுடன், இதன் நடிகர்கள், மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். காட்சிப்படுத்தலின் பின் பார்வையாளர்களுடன் கருத்தாடலும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தாடலிற் பல கருத்துக்கள், பாராட்டுக்களாகவும், விமர்சனங்களாகவும் முன் வைக்கப்பட்டன. குறும்படத்தின் உரையாடலில் நாடகமொழியின் செல்வாக்கு இருப்பதாகக் கூறப்பட்டது. படப்பிடிப்பில் நவீன தொழில்நுட்பத்தினை மேலும் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டும் எனவும், இவ்வாறான படைப்புக்கள் ஆவணங்களாகப் படைக்கப்பட வேண்டும். பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் இக்குறும்படத்தைக் காட்சிப் படுத்தவேண்டும் எனவும் கருத்துக்கள் கூறப்பட்டன.

ஒரு கலைப்படைப்பின் நோக்கம்: எடுத்துக்கொண்ட கருவை (பொருளை) மிகச் சிறப்பாகவும், அழகியல் அம்சங்களுடனும் பார்வையாளனுக்கு அளிக்கை செய்வதாகும். இந்தவகையில் இன்றைய இயந்திரமயமான சமூக இயங்குதள காலகட்டத்திற் பெருமளவு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாததும், ஆனால் அவசியமானதுமான ஒரு கருவை எடுத்து 25 நிமிடங்களுக்கு உயிரோட்டமான வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதற்குப் பல்வேறு காரணிகள் தூண்டுதலாக அமைகின்றன என்பதனை எடுத்துக்காட்டும் முகமாகவும், பெற்றோர் மத்தியிலே தமது பிள்ளைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இக்குறும்படம் தயாரிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரபல நாடகநெறியாளரும், பல குறும்படங்களில் நடித்து முதிர்ந்த அனுபவம் மிக்கவருமான திரு.க.இ.கமலநாதன் உட்பட்ட நடிகர்களின் நடிப்பு மெச்சத்தக்கதாக அமைந்திருந்தது. இரண்டு சிறுமிகளின் நடிப்பாற்றலை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இக்குறும்படத்திற்கான இசையமைப்பு மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள் ளமை மற்றுமோர் சிறப்பம்சம் ஆகும்.

இக்குறும்படத்தின் சிறப்பான வெற்றிக்காகக் காத்திரமான பங்களிப்பினை வழங்கிய அணிசெய் கலைஞர்கள்.

**நடிகர்கள்** : செல்வி க.ஓவியா, செல்வி சு.சினேகா, திரு.க.இ.கமலநாதன், திருமதி நித்திகா, திரு.இராஜபாரதி, செல்வி தர்சிகா, திரு.ஜெகன், திரு.விஜிதரன், திரு.குட்டிமணி, திரு.பிரதீப்

**படப்பிடிப்பு** : திரு.கே.திருமலைச்செல்வம் (செல்லா)

**படத்தொகுப்பு** : திரு.ரி.செல்வம்

**மொழிப்பிரதியாக்கம்** : திரு.கே.பிரசாத்

**இசையமைப்பு** : திரு.கு.அற்புதன்

**நெறியாள்கை** : திருமதி என்.ஸ்ரீதேவி

# காலம் அறிந்து மேற்கொள்ளப்பட்ட கலாசார விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இன்றைய சமூக வாழ்வியற் கோலத்தில் ஏற்பட்ட பிறழ்வுகளையும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் எடுத்துக்காட்டி எதிர்கால சந்ததியினரை நன்நெறியுடன் வாழ்வதற்கு வழிகாட்டும் பொருட்டு கலாசார விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் பலவற்றை வட மாகாணத்தில் முன்னெடுத்து வருகின்றது.

இந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களிற் கடமையாற்றுகின்ற கலாசார உத்தியோகத்தர்களை மூன்று குழுக்களாக்கி வகைப்படுத்தி பிரதேச ரீதியாக நடைமுறைப் படுத்துவதற்குரிய விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அம்மாவட்டத்திற் கடமையாற்றுகின்ற மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் 2012.06.07ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சின் ஒன்றுகூடல் மண்டபத்தில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டத்தின் இன்றைய கலாசார சமூக சூழ்நிலைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. ஒவ்வொரு கலாசார உத்தியோகத்தரும் தமது பிரதேசத்திற் காணப்படும் பொதுவான கலாசார பிறழ்வுகளையும், பிரதேசத்தில் ஏற்பட்ட விசேட மாற்றங்களையும் குறிப்பிட்டு அவற்றைத் தடுப்பதற்குக் கையாளவேண்டிய வழி வகைகளையும் எடுத்துக்கூறினர்.

கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தொடர்ச்சியான செயற்பாடு அவசியானது ஆகும். இந்தவகையிற் பின்வரும் செயற் றிட்டங்களையும் (குறிப்பிட்ட அமைப்புகளையும்), இலக்குக் குழு வினரையும் இதில் ஈடுபடவைப்பது மற்றும் இச்செயற்றிட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் ஆரோக்கியமான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## தொடர்ச்சியான செயற்பாடுகள்

- **கருத்தரங்குகளை நடாத்துதல்**
  * மாணவர்கள்
  * சமூக அமைப்புக்கள்
  * சங்கங்கள்.

- **வீதி நாடகங்களை நடாத்துதல்**
  * பொது இடங்கள்
  * சந்தை
  * மக்கள் கூடும் இடங்கள், பாடசாலைகளின் முன்பாக

- **சகல மட்டத்திலும் ஆன்மிக விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

- **பிரதேச ரீதியான அவதானிப்புக் குழு அமைத்தல்**
  * பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், கலாசார உத்தியோகத்தர்,பொலிஸ் உத்தியோகத்தர்.
  * தொலைபேசி விற்பனையாளர்கள்.
  * தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், ஆசிரியர்கள்.
  * ஹோட்டல், விடுதி உரிமையாளர்கள்.
  * வர்த்தகர்கள் (மது, சிகரட் விற்பனையாளர்கள்)
  * மத ரீதியிலான அமைப்புக்கள்.
  * கிராம மட்ட அமைப்புக்கள்.

பின்வரும் திகதிகளிற் கலாசார உத்தியோகத்தர்களுடன் கலாசார விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

| திகதி | மாவட்டம் |
|---|---|
| 2012.03.19 | - யாழ்ப்பாணம் |
| 2012.04.26 | - யாழ்ப்பாணம். |
| 2012.05.03 | - யாழ்ப்பாணம். |
| 2012.05.11 | - யாழ்ப்பாணம். |
| 2012.06.07 | - கிளிநொச்சி |

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறும் விழிப்புணர்வுச் செயற்றிட்டக் கலந்துரை யாடல்களிற் கலாசார விழுமியங்களைப் பேணுதல் தொடர்பான கருத்துப் பகிர்வு என்றதலைப்பில் பங்குபற்றுநர் அனைவருக்கும் வினாக் கொத்துக்கள் வழங்கப்

பட்டு, அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. "நல்லதோர் சமூகம் செய்வோம்..!" என்ற தலையங்கத்திலும், "பிரியமான மாணவச் செல்வங்களுக்கு" என்ற தலையங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய செயற்றிட்டங்களை விரைவாக நடைமுறைப் படுத்துவதற்குப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச கலாசார உத்தியோகத்தர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

## 1) யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குருநகர், திருநகர், ரெக்கிளமேஷன், பாசையூர் ஆகிய கிராமத்தின் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிற்குக் கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 2012.05.17ஆம் திகதி காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.







யாழ்ப்பாண மாவட்டத்தின் மையப் பிரதேசமாகிய யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நகரங்களிலும், கிராமங்களிலும் கலாசார விழிப் புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கு இப்பகுதிகளில் வாழும் மக்கள்

- சிறுவர்களை வேலைக்கு அமர்த்தப்படுவதை நிறுத்துதல்.
- மதுபாவனை, போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல்.
- பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாத்தல்.

போன்ற சமூகச் செயற்பாடுகளில் விழிப்புணர்வுடன் செயற்படுவதற்குத் திடசங்கற்பம் பூண்டார்கள்.

"சிறுவர் துஷ்பிரயோகமும் யாழ்ப்பாணக் கலாசாரமும்", "சிறுவர்களும் யாழ்ப்பாணக் கலாசாரமும் "சிறுவர் துஷ்பிரயோகமும் குடும்பமும்" போன்ற தலைப்புக்களிற் கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன்; இதுதொடர்பான துண்டுபிரசுரங்களும் பங்குபற்றியோருக்கு வழங்கப்பட்டன. இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தை யாழ்ப்பாணப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி இ.பத்மராணி அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2) வலிகாம் மேற்கு பிரதேச செயலகம் (சங்கானை)







கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் தெரு வெளி ஆற்றுகை நிகழ்வானது, வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி கா.நிருபா அவர்களினால் நெறி யாள்கை செய்யப்பட்டு, சுழிபுரம் காவேரி கலா மன்றத்தினரால் 2012.05.14ஆம் திகதி மாலை 04.30 மணிக்கு சங்கரத்தை வளர்மதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது.

வலிகாமம் மேற்கு, பிரதேச செயலாளர் திரு.அ.சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கலாசார உத்தி யோகத்தர். பிரதேச கலாசார உத்தியோகத் தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், பிரதேச கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். சங்கானை பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி கா. நிருபா நிகழ்வை ஒழுங்கு படுத்தினார்.



## 3) நல்லூர் பிரதேச செயலகம்

நாளைய தலைவர்களாகிய இன்றைய மாணவச் செல்வங்களின் மனதில் நற்கருத் துக்கள், நற்சிந்தனைகளை ஏற்படுத்தி நல் ஒழுக்கமுள்ள ஆளுமைமிக்க மனிதனாக வளர வழிகாட்ட வேண்டியது பெரியார்களின் கடமையாகும். கடமைகள் உரியநேரத்தில் செய்யப்படல் வேண்டும். அதன்மூலம் உயரிய பலனைப் பெறலாம்.





இச்சிந்தனையைக் கருத்திற்கொண்டு நல்லூர் பிரதேச செயலாளர் திரு.பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி கா.ரஜனி ஆகியோரின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டால் துறைசார் வளவாளர்கள்மூலம் நல்லூர்ப் பிரதேசத்தின் பின்வரும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்காகக் கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதுடன் "நல்லதோர் சமூகம் செய்வோம்" என்னும் தலையங்கத்தில் விழிப்புணர்வுக் கருத்துக்களைக்கொண்ட துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் -2012.05.15
- கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் -2012.05.17
- கோண்டாவில் இராமகிருஷ்ணா பாடசாலை -2012.05.18
- பெரியபுலம் மகா வித்தியாலயம் -2012.05.15
- அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் -2012.05.22
- கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் -2012.05.28
- கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயம் -2012.05.29
- கொக்குவில் நாமகள் வித்தியாசாலை -2012.05.31
- நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை -2012.06.01
- கொக்குவில் இந்துக் கல்லூரி -2012.06.05
- யாழ்.இந்துக் கல்லூரி -2012.06.08
- நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் -2012.06.11
- திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்-2012.06.12
- யாழ்.இந்து மகளிர் கல்லூரி - 2012.06.14

**4) வலிகாம் தென்மேற்கு பிரதேச செயலகம் (சண்டிலிப்பாய்)**

பிரதேச மக்களுக்குக் கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கமும், தெருவெளி அரங்காற்றுகை நிகழ்வும் பிரதேச செயலாளர் திரு.எஸ்.முரளிதரன் தலைமையில் 2012.05.19ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 03.00 மணிக்கு இளவாலை உயரப்புல பொதுநோக்கு மண்டப வெளியரங்கில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாண அரங்க கலைக்கழகம் (உயரப்புலம்) வழங்கிய "சமூக விழிப்பு" என்னும் நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கான கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கு 2012.05.25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.01.00 மணிக்கு பிரதேச செயலாளர் திரு.சு.முரளிதரன் தலைமையில் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.







நவாலி மகா வித்தியாலயத்திலும் 2012.06.07ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிரதேச செயலாளர் திரு.சு.முரளிதரன் தலைமையிற் பாடசாலை மாணவர்களுக்கான கலாசார விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடைபெற்றது. இந் நிகழ்வுகளை சண்டிலிப்பாய் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி கி.மாலினி அவர்கள் ஒழுங்குபடுத்தி நடாத்தியிருந்தார்,

**5) தெல்லிப்பளை பிரதேச செயலகம்**

தெல்லிப்பளை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களிடையே கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிற் கருத்தரங்குகளும், கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திரு.க.ஸ்ரீமோகனன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. தெல்லிப்பளை பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி செ.தாட்சாயினி நிகழ்வை ஒழுங்கு படுத்தினார். இந் நிகழ்வுக்குப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள், கலாசாரப்பேரவை உறுப்பினர்கள், கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், வினாக்கொத்துக்கள் என்பன பங்குபற்றுநர்களுக்கு வழங்கப்பட்டது. சிறுவயது தொழிலாளர், பாடசாலை

மாணவர்களின் இடைவிலகல், இளையோரின் மதுபாவனை, பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் போன்ற விடயங்கள் தொடர்பாக சமூக விழிப்புணர்வுக் கருத் துரைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் 2012.06.29ஆம் திகதியும், யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 2012.07.05ஆம் திகதியும், யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டியில் 2012.07.12ஆம் திகதியும், யாழ்.மகாஜனாக் கல்லூரியில் 2012.07.13ஆம் திகதியும் கலாசார விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.







### 6) பருத்தித்துறை பிரதேச செயலகம்

போதைப்பொருள் மதுபாவனை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களின் ஒத்து ழைப்புடன் 2012.05.09ஆம் திகதி மாலை 04.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு.இ.த. ஜெயசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை சிவன்கோவிலடியிலிருந்து ஆரம்பமான ஊர்வலமானது பருத்தித் துறை பஸ்நிலையம், 1ஆம் குறுக்குத்தெரு ஊடாகப் பருத்தித்துறைக் கடற்கரை வரை விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்று, நடராஜர் கலையரங்கிற்கு அருகில் விழிப் புணர்வுக் கருத்தரங்கம் மற்றும் சமூக விழிப்புணர்வுக் கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரபிதா தவிசாளர் திரு.சபா.ரவீந்திரன், வல்வெட்டித் துறை நகரபிதா திரு.நா.அனந்தராஜ், பருத்தித்துறைப் பிரதேசசபை தவிசாளர் திரு.பூ.சஞ்சீவன், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர், நகராட்சி மன்ற உறுப்பினர், பருத்தித்துறை பங்குத்தந்தை, இஸ்லாமிய மதகுரு, S.L.R.C பிரதிநிதி, வர்த்தக சங்கத் தலைவர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர். பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். இந்நிகழ்வைப் பருத்தித்துறைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி சே.செல்வசுகுணா அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார்.

## நிலாக்காலக் கருத்தரங்கு நிகழ்வு

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டில் பிரதேச செயலகங்களூடாக முன்மொழியப்பட்ட செயற்றிட்டங்களுக்காக 50,000/= ஒதுக்கப்பட்டு, திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் மாதாந்தம் முழுநிலாக் கால விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுவருகிறது. அண்மையில் "அன்றாட வாழ்வில் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்தல்" எனும் தலைப்பில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தலைவராகப் பிரதேச செயலாளர் திரு. த.முகுந்தன் அவர்களும், வளவாளர்களாக கிளி. வலயக் கல்விப் பணிமனை தமிழ்ப்பாட சேவைக்கால ஆலோசகர் திரு. அ.பௌநந்தி மற்றும் சிரேஷ்ட தமிழ் ஆசிரியர் செ. ஆறுமுகம் ஆகியோர் கருத்துரை ஆற்றினர். இதில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வைக் கண்டாவளைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திரு. த. அமலதாஸ் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தார்.






# "தாண்டவ உதயம்"

## கீழைத்தேய ஆடற்கதை (Oriental Ballet)



புராண இதிகாசக் கதைகள் யாவும் மானுட வாழ்வியலை நெறிப்படுத்துவதற்காகப் படைக்கப்பட்டன. இறைவன் தன்படைப்பில் உயர்வு, தாழ்வு இல்லை என்பதை உணர்த்துவதற்காக உமையவளையே மீனவப் பெண்ணாகப் பிறக்கச்செய்து மீண்டும் ஆட்கொண்டார். இம் மானுட ஆளுமைமிகு செய்தியைத் துல்லியப்படுத்தும் அரங்க செயற்பாடே இத் தாண்டவ உதயம். சமூகத்திற்கு இத்தகைய செய்தியை உளப்பதிவு செய்யும் முக்கிய இலக்கைக் கொண்டதாக அமைந்ததே இக் கலைப் படைப்பு.

இதனை வெளிப்படுத்தும் வகையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் "நாட்டியப் பேராசான்" கலைஞர் வேல்.ஆனந்தனின் நெறியாள்கையில் "தாண்டவ உதயம்" கீழைத்தேய ஆடற்கதை (Oriental Ballet) நிகழ்வு 2011.06.16 சனிக்கிழமை மாலை 05.30 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்விற்கு வடமாகாணக் கௌரவ ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வடமாகாணப் பிரதம செயலாளர், வட மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணசபையின் செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ்.மாநகர சபையின் முதல்வர், வடமாகாண கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் அரங்கு நிறைந்த கலைஞர்கள், கலை இலக்கிய இரசிகர்கள் ஆகியோர் இந்நிகழ்விற் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





தாண்டவ உதயம் ஆற்றுகைக்கு உதவி நெறியாளராகச் செயற்பட்டவர் யாழ்.வலயக் கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோகராகக் கடமையாற்றும் நடனவாரிதி திருமதி. பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களாவார். பக்கவாத்தியக் கலைஞர்களின் அர்ப்பணிப்புமிகு பங்களிப்பு ஆற்றுகையின் சிறப்பிற்கு மெருகூட்டியமை குறிப்பிடத்தக்கது.



# "தாண்டவ உதயம்" - வவுனியா

"தாண்டவ உதயம்" நிகழ்வை வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் ஆற்றுகை செய்வதற்குத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில், வவுனியா நகரசபை மண்டபத்தில் 2012.07.03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 06.00 மணிக்கு வவுனியா பிரதேச செயலாளர் திரு.அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இவ்வாற்றுகை நிகழ்த்தப்பட்டது.





இந்நிகழ்விற்கு வவுனியா அரச அதிபர் திரு.ஆ.மு.பந்துல ஹரிஸ்சந்திர மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் ஏராளமான கலைஞர்கள், பொதுமக்கள், இரசிகர்கள் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன், வவுனியா மாவட்டத்தின் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் இணைந்து நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# எழுத்தாளர்களுடைய படைப்புக்களை வெளியிடுதல்

தமது எழுத்துக்களை நூல்வடிவில் வெளியிடுவதற்குரிய பொருளாதார வளமற்று, இலை மறைகாயாக இருக்கும் எழுத்தாளர்களுடைய படைப்புக்களை வெளிக் கொணர்ந்து, சமூகத்திற்கு அவர்களின் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் நோக்குடனும் அதன் மூலம் இளம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கிலும் கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை திருநகர் நடராசா அவர்களுடைய "ஓய்வு" என்னும் சிறுகதைத் தொகுதியினை 18.08.2012ஆம் திகதி சனிக்கிழமை பிரதேச செயலாளர் திரு.ஜி.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்விற்கு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

எதிர்காலத்தில் இதேபோன்று வறிய கலைஞர்களின் நூல்களை வெளியிடுவதற்கும் கலாசாரப் பேரவை தீர்மானித்துள்ளது. இதற்கான ஒழுங்குகளைக் கரைச்சிப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திரு.கு.ரஜீபன் மேற்கொண்டுள்ளார்.





# கிராமம் தோறும் நூலகம்

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேச செயலக எல்லைக்குள் "கிராமம் தோறும் நூலகம்" எனும் செயற்றிட்டம் பிரதேச செயலகத்தினாலும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினாலும் இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை இனம்காணப்பட்ட பிரதேசங்களில் ஏழு நூலகங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந் நூலகங்களைப் பெருமளவான மாணவர்கள், வாசகர்கள் பயன்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண கௌரவ ஆளுநர் விருது-2012

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், தம் வாழ்நாளில் கலைக்கும், தமிழுக்கும் சிறப்பாகப் பணியாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் முகமாக வருடாவருடம் வழங்கிவரும் உயர்விருதான "கௌரவ ஆளுநர் விருது - 2012" க்குரிய கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காக வடமாகாணத்தின் பிரதேச செயலகங்களில் இருந்து கலைக்கும், தமிழுக்கும், சமூகத்திற்கும் சிறப்பாகப் பணியாற்றிய 60 வயதிற்கு மேற்பட்ட மூத்தகலைஞர்களின் பெயர் விபரங்களைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள்மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

இத்தேர்வுக்காக, ஒவ்வொரு பிரதேசச் செயலகங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட மிகச்சிறந்த இரண்டு கலைஞர்களின் பெயர் விபரங்கள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. எதிர்வரும் மாதத்தில் மாகாணத் தேர்வுக்குழுவினர் வடமாகாண கௌரவ ஆளுநர் விருதுக்குரிய சான்றோரைத் தெரிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி 2011

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடாவருடம் வடமாகாணத்தின் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்படி போட்டித்தேர்வை நடாத்திவருகின்றது.

இத்தேர்வுக்காகப் பல துறைகளிற்கும் ஏராளமான நூல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. துறைசார் அறிஞர்களிடம் இந்நூல்கள் கையளிக்கப்பட்டு; அதன் பெறுபேற்றின் அடிப்படையில் துறைரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட நூலின் ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2012 ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவின் நிறைவுநாளிற் கௌரவிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்வு - 2012

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சகல சமயத்தவர்களினதும் விசேட நிகழ்வுகளை வருடாவருடம் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் உலகெங்கும் பரந்துவாழும் இஸ்லாமியர்கள் புனித நோன்புகாலத்தைக் கொண்டாடி வருகின்றார்கள். அளவற்ற அருளாளனும், நிகரற்ற கொடையாளனுமாகிய அல்லாவின் வழிகாட்டலில் ஏழையின் பசியை அறியவும்; சமூகத்திற்குத் தேவையான நற்காரியங்களை ஆற்றவும்; அனைவரும் ஒன்றுபட்டு வாழவும் விசேடமாக இந்த நோன்பு காலம் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







இத்தகைய சிறப்பான இப்தார் நிகழ்வை (நோன்பு திறக்கும்) முன்னிட்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகத்தில் 2012.08.15ஆம் திகதி பதன்கிழமை மாலை 05.00 மணிக்கு நடைபெற்றது.

முசலி பிரதேச செயலாளர் திரு.எஸ்.கேதீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முசலி பிரதேச மௌலவிமார்கள், மார்க்க அறிஞர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். இப்தார் நிகழ்வுகளை முசலி பிரதேசக் கலாசார உத்தியோகத்தர் ஜனாப் கே. எம். என். நஸ்ருதீன் அவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


"நோன்பு எனக்குரியது அதற்கு நானே கூலி வழங்குகின்றேன்"
(அல்-குர்ஆன்)

# தடம்பதித்துச் சென்ற தெய்வீக சுக அனுபவம்

## இசை, நடன ஆற்றுகை - 2012











கலை என்பது அனைவரையும் ஒன்றிணைப்பது. "இசையால் வசமாகாத இதயம் ஏதுமில்லை" இதை மெய்ப்படுத்தும் வகையில் கௌரவ ஆளுநர் மற்றும் உத்தியோகத்தர்கள் வடமாகாணம், இந்திய துணைத்தூதரகம் யாழ்ப்பாணமும் இணைந்து, இலங்கை இந்திய நட்புறவு அமைப்பின் அனுசரணையுடன் வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தன் ஆலயத்தின் 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு 2012.08.16ஆம் திகதி தொடக்கம் 2012.08.18ஆம் திகதி வரை தென்னிந்தியாவில் தத்தம் துறைகளில் முத்திரை பதித்த கர்நாடக இசைப்பாடகர் ஸ்ரீ.பி.உன்னிக் கிருஸ்ணன் மற்றும் ஸ்ரீ.ரி.எம் கிருஸ்ணா அவர்களுடன் நாட்டியப் பேரொளி ஸ்ரீமதி அலர்மேல் வள்ளி அவர்களும் தமது குழுவினருடன் கலந்துகொண்டு பயிற்சிப் பட்டறையினையும், ஆற்றுகையினையும் வழங்கியிருந்தனர்.

2012.08.17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கு சங்கிலியன் தோப்பு, திறந்த வெளியரங்கில் ஸ்ரீமதி அலர்மேல்வள்ளி அவர்களுடைய பரதநாட்டிய நிகழ்வு நடைபெற்றது. வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்திய நாட்டுத் தூதுவர் திரு.அசோக்மேத்தா அவர்கள் கலந்துகொண்டார். மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏராளமான கலைஞர்கள், இரசிகர்கள் என்போர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். ஆற்றுகைக் கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.









வரலாற்றுப் புகழ்மிக்க இப்பரதநாட்டிய நிகழ்வுக்கு அணிசெய் கலைஞர்களாக குமாரி தீபிகா வரதராஜன் - வாய்பாட்டு, ஸ்ரீ ஜெயஸ்ரீ ராமநாதன் - நட்டுவாங்கம், குமாரி கே.பி.நந்தினி - வயலின், ஸ்ரீகணேஸ் ராமமூர்த்தி - மிருதங்கம் ஆகிய கலைஞர்கள் தமது அர்ப்பணிப்புமிகு பங்களிப்பை வழங்கிப் பரதநாட்டிய நிகழ்வை மெருகூட்டினர்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் பரதநாட்டிய ஆசிரியர்கள், கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் என்போர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2012.08.18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 06.30 மணிக்கு சங்கிலியன் தோப்பில், திறந்த வெளியரங்கில் ஸ்ரீ.பி.உன்னிக்கிருஸ்ணன் அவர்களுடைய இசைக்கச்சேரி இடம்பெற்றது. அரங்கு நிறைந்த ஆயிரக்கணக்கான இரசிகப் பெருமக்கள் முன்னிலையில் இவ் ஆற்றுகை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மிகச்சிறந்த கர்நாடகப் பாடல்களையும், தெய்வீக இசைப்பாடல்களையும் உன்னிக்கிருஸ்ணன் அவர்கள் பாடினார். இரசிகர்கள் பலத்த கரகோஷம் செய்து பாடகரை உற்சாகப்படுத்தினார்கள். இத் தெய்வீக இசைக்கச்சேரிக்கு அணிசெய் கலைஞர்களாக ஸ்ரீ.நாகை ரங்கசாமி, ஸ்ரீராம் - வயலின், ஸ்ரீ.பி.கணபதிராமன் - மிருதங்கம், ஸ்ரீ பாபநாசம் சேதுராமன்- கஞ்சிரா ஆகிய கலைஞர்கள் தமது அர்ப்பணிப்புமிகு பங்களிப்பை வழங்கி இசைக்கச்சேரி நிகழ்வை மெருகூட்டினர்.

இந்நிகழ்விற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்தியத் துணைத்தூதரகம் யாழ்ப்பாணம் - திரு.மகாலிங்கம் மற்றும் கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், கலைஞர்கள் என்போர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். ஆற்றுகைக் கலைஞர்கள் அனைவரும் பொன்னாடை போர்த்தியும், நினைவுப்பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்கள்.






# ஆற்றுப்படுத்திய

# இசை, நடன பயிற்சிப்பட்டறைகள் - 2012

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு 2012.08.16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 02.30மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீமதி அலர்மேல் வள்ளி அவர்களுடைய பரதநாட்டிய பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பரதநாட்டிய ஆற்றுகை தொடர்பான நுட்பங்கள், ஆற்றுகை நுணுக்கங்கள் என்பன செயற்பாட்டு ரீதியாக ஸ்ரீமதி அலர்மேல் வள்ளி அவர்களினால் வழங்கப்பட்டது. நிகழ்வில், ஸ்ரீ.ரி.எம்.கிருஸ்ணா அவர்கள் ஸ்ரீமதி அலர்மேல் வள்ளி அவர்களைச் செவ்வி கண்டார். இதனைத் தொடர்ந்து பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர் களினால் கேள்விகள் கேட்கப்பட்டது. பங்குபற்றுநர்களின் வினாவுக்குரிய பொருத்தமான பதிலை ஆற்றுகையாளர் வழங்கினார்.









இப் பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறை விரிவுரையாளர்கள், பாடசாலை பரதநாட்டிய ஆசிரியைகள், இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் உட்பட 700க்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர்.

வடமாகாண வாய்பாட்டுக் கலைஞர் களுக்காக 2012.08.17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் ஸ்ரீ.பி.உன்னிக் கிருஸ் ணன் அவர்களுடைய வாய்பாட்டு பயிற்சி நடைபெற்றது. கர்நாடக சங்கீத இசைக்கச்சேரிகளை நடாத்தும்போது பாடகர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், தெரிவுசெய்யப்படும் பாடல்கள் தொடர் பாகவும் அதற்கேற்ப எவ்வாறு கச்சேரியை நடாத்துவது என்பன போன்ற நுட்பங்கள் எடுத்துக் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





கைலாசபதி கலையரங்கம் நிறைந்து, பங்குபற்றுநர்கள் நின்ற நிலையில் மிக ஆர்வத்துடன் இப்பயிற்சிப்பட்டறையிற் பங்குபற்றியிருந்தார்கள். வடமாகாண கல்வி அமைச்சின் திரு.சி.சத்தியசீலன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு ஏராளமான வாய் பாட்டுக் கலைஞர்கள், விரிவுரையாளர் கள் உட்பட 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.







ஒரு இசைக்கச்சேரியின் வெற்றிக்குப் பக்கவாத்தியங்களின் காத்திரமான பங்களிப்பு அவசியமாகும். அந்தவகையில் 2012.08.18ஆம், திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தென்னிந்தியாவில் புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகர் T.M.கிருஸ்ணா அவர்களுடைய பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இதில் கர்நாடக இசைப்பாடல்களிற் பக்கவாத்தியங்களின் பங்களிப்புத் தொடர்பாகவும், அதன் ஆற்றுகையின்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. பக்கவாத்தியங்களிற் பயன்படுத்தப்படும், சந்தர்ப்பங்கள், இசைக்கச்சேரிகளில் அவற்றின் பயன்பாடு மற்றும் பங்களிப்புத் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.






இந்நிகழ்விற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அரங்கு நிறைந்த பக்கவாத்தியக் கலைஞர்கள், இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என்போர் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

பக்கவாத்தியப் பயன்பாடுகள் தொடர்பாகப் பல கேள்விகள் கேட்கப்பட்டு அதற்குரிய பொருத்தமான பதில் வழங்கப்பட்டதுடன் செயன்முறை விளக்கங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சிப்பட்டறையில் 800க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களும், பக்கவாத்தியக் கலைஞர்களும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# நாட்டிய மயில் - 2012

முல்லைத்தீவுப் மாவட்டத்தில் பரதநாட்டியக் கலைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிற் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தினால் 2012.04.27ஆம் திகதி காலை 09.00 மணிக்குப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திரு.வீ.பிரதீபன் தலைமையில் வள்ளுவர்புரம் பொதுநோக்கு மண்டபத்தில் பரதநாட்டியக் கலைஞர்கள், இக்கலையைப் பயிலும் மாணவர்களுக்கிடையே "நாட்டிய மயில்" போட்டி நிகழ்வு நடாத்தப்பட்டது.



இந்நிகழ்வுக்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் திரு.சி. ஜெயகாந் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார். இப்போட்டியானது

1. கனிஷ்ட பிரிவு (கீழ்ப்பிரிவு )
2. சிரேஷ்ட பிரிவு (மேற்பிரிவு)

என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுப் போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பாகத் தம் ஆளுமையை வெளிப்படுத்திய மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். வெற்றி பெற்றவர்களுக்குப் பிரதம விருந்தினரால் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஒக்ரோபர் மாதம் மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள "நாட்டிய மயில்" போட்டியிற் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



